இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 07.03.2026

# நிதிஷ்குமாரின் கதியைப் பாருங்கள்!

**பத்து முறை பீகார் மாநில முதலமைச்சராக இருந்த நிதிஷ்குமாரைப் பந்தாடிவிட்டது பா.ஜ.க. அவரையே ஆக்ஸிஜனாக வைத்து வளர்ந்த பா.ஜ.க., இப்போது அவரது இருதயத்தையே பறித்து உறுப்புகளை மாற்றி விட்டது. 'எல்லாம் அவரால்' என்று சொல்லப்பட்ட நிதிஷ்குமார், நிர்கதியாக டெல்லிக்குப் போகப் போகிறார். இதைத் தான் திருதராஷ்டிர ஆலிங்கனம் என்பார்கள்.**

மகாபாரதக் கதையில் ஒரு காட்சி...

பாரதப் போர் முடியும்போது பாண்டவர்கள் திருதராஷ்டிரனிடம் வணக்கம் சொல்ல வருவார்கள். பீமனை அணைத்து அழிக்க திருதராஷ்டிரன் திட்டமிடுவார். 'பீமா வா, உன்னை கட்டிப் பிடிக்க வேண்டும்' என்று திருதராஷ்டிரன் கூப்பிடுவார். கிருஷ்ணனுக்கு திருதராஷ்டிரனைப் பற்றித் தெரியும் என்பதால் பீமன் போல ஒரு வெண்கலச் சிலையை செய்து திருதராஷ்டிரன் முன் நிறுத்துவார். ஒரே தழுவலில் அந்தச் சிலையை சுக்குநூறாக நொறுக்குவார் திருதராஷ்டிரன். இதற்குப் பெயர்தான் 'திருதராஷ்டிர ஆலிங்கனம்' என்று பெயர். அந்தக் கதிக்குத் தான் ஆளாக்கப்பட்டுள்ளார் நிதிஷ்குமார். அது கதை. இப்போது நிதிஷ்குமாருக்கு நடந்திருப்பது உண்மை.

கடந்த நவம்பர் மாதம் பீகாரில் சட்டசபைத் தேர்தல் நடந்தது. இதில் பா.ஜ.க. - ஐக்கிய ஜனதாதளம் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. மொத்தம் 243 சட்டசபை தொகுதிகள் உள்ள நிலையில் பா.ஜ.க. 89 தொகுதிகளிலும், நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதாதளம் 85 தொகுதிகளிலும் வென்றன. நிதிஷ் குமார் 10வது முறையாக பீகார் முதல்வரானார்.

பீகார் தேர்தலின்போது, நிதிஷ் குமார் தான் முதலமைச்சர் வேட்பாளர் எனக் கூறி பிரச்சாரம் செய்தது பா.ஜ.க. அதனால் தான் ஆட்சிக்கு வந்தது அக்கூட்டணி. ஆனால் மூன்றே மாதத்தில் நிதிஷின் பதவியைப் பறித்துவிட்டது பா.ஜ.க.

இந்நிலையில் தான் தற்போது நிதிஷ் குமார் மாநில அரசியலை விட்டு தேசிய அரசியலுக்குள் நுழைகிறார். பீகாரில் காலியாக உள்ள 5 ராஜ்யசபா இடங்களுக்கான வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது. இதற்கு நிதிஷ் குமார் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். விரைவில் அவருக்கு ஒன்றிய அமைச்சர் பதவி வழங்கப்படலாம். மோடி அமைச்சரவையில் அதிகாரமற்று நிதிஷ்குமாரை உட்கார வைக்கப் போகிறார்கள்.

**பீகார் மாநிலத்தின் முதலமைச்சராக பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒருவர் அரியணை ஏற இருக்கிறார். பீகார் மாநிலத்தில் முதல் முறையாக பா.ஜ.க.வின் ஆட்சி அமைய உள்ளது. பீகாரில் இதுவரை பா.ஜ.க. ஆட்சி அமைந்ததே இல்லை. முதல்வராக ஒருவர்கூட பா.ஜ.க.வில் இருந்தது இல்லை.**

1974 ஆம் ஆண்டில் இருந்து பீகார் மாநில அரசியலில் இருப்பவர் நிதிஷ் குமார். முதல்முறையாக 2000ஆம் ஆண்டு தேசிய ஜனநாயக கூட்டணியில் போட்டியிட்டு முதல்வரானார்.

இதுவரை10முறை பீகார்மாநிலத்தின்முதலமைச்சராக இருந்துள்ளார். அவரையே முடக்கிவிட்டது பா.ஜ.க. மோடியை மிகக்கடுமையாக தொடக்க காலத்தில் இருந்து எதிர்த்தவர் நிதிஷ்குமார். அந்த அரசியலை ஒழுங்காகச் செய்யாததன் விளைவைத் தான் நிதிஷ்குமார் இப்போது அனுபவிக்கிறார்.

2014ஆம் ஆண்டில் மோடிதான் பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்தபோது பா.ஜ.க.வுடனான உறவை முறித்துக் கொண்டவர் நிதிஷ். பின்னர் அவரே அவருக்கு ஆதரவைத் தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டு மோடிக்கு எதிரான 'இந்தியா' கூட்டணியில் முதல் தலைவராக இருந்தவரும் நிதிஷ் தான். 'இந்தியா' கூட்டணியின் முதல் கூட்டத்தை பாட்னாவில் மிகச்சிறப்பாக நடத்தியவரும் அவர்தான். திடீரென பின்வாங்கினார் நிதிஷ். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்தார். 2025 பீகார் சட்டசபைத் தேர்தலில் பாதிக்கு பாதி இடங்களை நிதிஷ்குமாரிடம் பறித்தது பா.ஜ.க. இப்போது அவரிடம் இருந்து முதலமைச்சர் பதவியையே பறித்துவிட்டது பா.ஜ.க.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மூன்று மாதங்களிலேயே அந்தப் பதவியை விட்டு விலகி ராஜ்யசபா எம்.பி.யாக நிதிஷ் குமார் முடிவெடுத்திருப்பது அவரது விருப்பம் அல்ல, கட்டாயம் ஆகும். 'எப்போதும் பீகாரிகளுக்காகப் பாடுபடுவேன்' என்று கூறிவந்த அவர், அவர்களை விட்டுவிட்டு டெல்லிக்குப் போனது நிர்ப்பந்தமே தவிர வேறல்ல. பா.ஜ.க.வைச் சேர்ந்தவரை முதலமைச்சர் ஆக்க, நிதிஷ்குமாரின் அரசியல் வாழ்க்கை பலியிடப்பட்டது. பா.ஜ.க.வுக்கு பாதசேவை செய்தால் என்ன நடக்கும் என்பதற்கு சமீபத்திய உதாரணங்கள் மகாராஷ்டிராவும் பீகாரும்.

மராட்டியத்தில்தேசியவாதகாங்கிரசைஉடைத்தார்கள். சிவசேனாவை உடைத்தார்கள். உடைத்து வந்தவர்கள் இப்போது பா.ஜ.க.வுக்கு பாதம் தாங்கிகளாக மாறிக் கிடக்கிறார்கள். 2024 மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தல் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் நடத்தப்பட்டது. ஆனால், 'மகாயுதி' கூட்டணி வெற்றி பெற்ற பிறகு, பா.ஜ.க-வின் தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராகப் பதவியேற்றார். ஷிண்டே துணை முதலமைச்சராகத்தான் ஆனார். அஜீத் பவார் மர்மமான முறையில் மறைந்தும் போனார். மறுநாளே அவர் மனைவி துணை முதலமைச்சராக ஆக்கப்பட்டுவிட்டார். பா.ஜ.க. ஆட்சி தொடர்கிறது. இதுதான் மராட்டியத்தின் இன்றைய அரசியல்.

நிதிஷ் குமார் பதவி விலக எதிர்ப்பு தெரிவித்து அவரது கட்சியினர் போராட்டம் நடத்தி வருவதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. அவர்களால் என்ன செய்ய முடியும்? இதனைத்தான் பீகார் மாநிலத்தில் இருந்து தேஜஸ்வீ அபாய எச்சரிக்கை செய்துள்ளார்.

**"கூட்டணிக் கட்சிகளை ஹைஜாக் செய்வதுதான் பா.ஜ.க.வின் வாடிக்கை. நிதிஷ்குமாரின் கட்சியை பா.ஜ.க. ஹைஜாக் செய்துவிடும் என தேர்தலுக்கு முன்பே சொன்னேன். கூட்டணிக் கட்சிகளை அழிப்பது பா.ஜ.க.வின் வாடிக்கையாக இருந்து வருகிறது. மகாராஷ்டிராவில் சிவசேனா, பீகாரில் ஐக்கிய ஜனதா தளம், தமிழ்நாட்டில் அ.தி.மு.க. என தங்களுடன் கூட்டணி வைப்பவர்களை அழிக்க முயற்சிக்கிறது பா.ஜ.க. பீகாரில் நிதீஷ்குமார் பதவி விலகுவது தமிழ்நாட்டுத் தேர்தலிலும் எதிரொலிக்கும் நிகழ்வாக அமைந்துள்ளது" என்று தேஜஸ்வீ மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார்.**

**நாம் சொன்னால் எடப்பாடி பழனிசாமி கேட்க மாட்டார். இதோ நிதிஷ் குமாரின் கதியைப் பார்த்தாவது திருந்த வேண்டும் எடப்பாடி பழனிசாமி.**

# மார்ச் 6 - அறிஞர் அண்ணா ஆட்சியில் அமர்ந்து தமிழினம் தலை நிமிர்ந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 7 -

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 மார்ச் 6ஆம் தேதி முதன்முதலில் தமிழ் நாட்டின் முதல்வராக பொறுப் பேற்றதை பெருமிதத்துடன் சுட்டிக்காட்டி கழகத் தலை வரும் தமிழ் நாட்டின் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-



**மார்ச் 6: அண்ணா ஆட்சி யில் அமர்ந்து தமிழினம் தலை நிமிர்ந்த நாள்.**

**1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமை யிலான அமைச்சரவை பொறுப்பேற்று, தமிழ்நாட்டின் எழுச்சிக்கும் தமிழினத்தின் மீட்சிக்கும் விதை யூன்றிய இந்த நாளில், அடுத்த 5 ஆண்டு களில் தமிழ்நாட்டின் வளர்ச் சிக்கான Stalin Statement-ஐ அறிவிக்க இருக்கிறேன்!**

**திராவிட ஆட்சி இம்மண் ணில் மையம் கொண்ட நாளி லேயே, DravidianModel 2.0-வுக்கான அடிக்கல்லை நாட்டுகிறேன்... உங்கள் அனைவரின் ஆதரவோடும்!**

இவ்வாறு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச் சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு 2030 "கனவு மெய்ப்படும்" கலந்துரையாடல் நிகழ்ச்சியில், பல்வேறு துறைகளின் சார்பில் தமிழ்நாடு அரசின் ஐந்தாண்டு சாதனைகளை விளக்கும் காணொலியை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், டி.ஆர். பாலு உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், சமூக ஊடகவியலாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கலை, பண்பாடு, இலக்கியம் சார்ந்த ஆளுமைகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (6.3.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு 2030 "கனவு மெய்ப்படும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ், கணக்கெடுப்பில் பொதுமக்கள் பயனடைந்த திட்டங்கள் குறித்தும், பொதுமக்கள் தெரிவித்த கனவு திட்டங்கள் குறித்தும் விளக்கினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், டி.ஆர். பாலு உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், சமூக ஊடகவியலாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், திரையுலகப் பிரபலங்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கலை, பண்பாடு, இலக்கியம் சார்ந்த ஆளுமைகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.6 கோடி மதிப்பீட்டில் மதுரையில் ஒலிம்பிக் அகாடமி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மதுரை, மார்ச் 7-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை ஒலிம்பிக் அகாடமியை திறந்து வைத்தார்.**



முதலமைச்சர் அவர்கள் விளை யாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந் தியாவின் முதன்மை மாநிலமாக உரு வாக்கி வருகின்றார். விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து பல்வேறு அரசுத்துறைகள் மற்றும்பொதுத்துறைநிறுவனங்களில் பணி நியமனம் செய்து வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்க ளுக்கான சிறப்பு உதவித்தொகை (ELITE) வழங்கும் திட்டத்தின்கீழ் விளை யாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயை 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக் கையை முதலமைச்சர் அமைச்சர் அவர்கள் 12 லிருந்து 50 ஆக உயர்த் தியுள்ளார்.

மேலும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற் கான ஊக்குவிப்பு (MIMS) வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்து நிதி யுதவியை 10 இலட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த் தியதோடு, பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியுள்ளார்.

அதேபோல் சாம்பியன் டெவலப் மெண்ட் திட்டத்தின் (CDS) கீழ் பயன் பெறும் வயதிற்குட்பட்டோர் பிரிவு விளையாட்டு வீரர்களின் எண்ணிக் கையை 100 லிருந்து 200 ஆக உயர்த்தியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் விளை யாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடு களுக்கு சென்று பயிற்சி பெறவும், அதி நவீன உயர்தர விளையாட்டு உபகர ணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உரு வாக்கி நிதியுதவி அளித்து வருகின்றார். மேலும், சர்வதேச மற்றும் தேசிய அள விலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனை களுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றார்.

மேலும் தமிழ்நாட்டின் விளை யாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க பயிற்சி பெறும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் சர்வ தேச தரத்திலான உடற்பயிற்சி கூடங் கள், உள்ளரங்க மைதானங்கள், பார் வையாளர் கூடங்கள், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் முதல மைச்சர் சிறு விளையாட்டு அரங்கம், உள்ளரங்க வாலிபால், கூடைப்பந்து, மைதானங்கள், கபடி குத்துச்சண்டை மைதானங்கள், சர்வதேச தரத்திலான நீச்சல் குளங்கள், ஹாக்கி மைதானங் கள் என நவீன விளையாட்டு கட்ட மைப்புகளை உருவாக்கி வருகின் றார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனியாக விளையாட்டு மைதானங் களை நிறுவி வருகின்றார். இதன் கார ணமாக கடந்த 5 ஆண்டுகளில் நூற் றுக்கணக்கான விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளி விளை யாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற் கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த் துள்ளனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் உயர் திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க மேடையை அடைவ தற்கு தேவையான அனைத்து வசதிக ளும் கொண்ட ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும் என அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கபடி மற் றும் டேபிள் டென்னிஸ் விளை யாட் டினை ஊக்குவிக்கும் வகையில் தரை தளத்தில் ஒரு கபடி ஆடுகளம், முதல் தளத்தில் 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுகளம் கொண்ட 250 இருக்கைகளுடன் கூடிய உள்வி ளையாட்டரங்கம் மற்றும் ஆண், பெண் உடைமாற்றும் அறைகள் கொண்ட வசதியுடன் ஒலிம்பிக் அகா டமி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒலிம்பிக் அகாடமியில் நவீன வசதிகளுடன் கொண்ட புதிய உடற்பயிற்சி கூடம் அமைக்கப்பட்டுள் ளது. தற்போது உள்ள திறந்தவெளி கூடைப்பந்து ஆடுகளம் செயற்கை தரையமைப்பு ஆடுகளமாகவும், தற் போது உள்ள மூன்று திறந்தவெளி டென்னிஸ் ஆடுகளங்கள் செயற்கை தரையமைப்பு கூடிய புதிய டென்னிஸ் ஆடுகளங்களாகவும் மாற்றியமைக் கப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.3.2026) மதுரை மாவட்ட விளை யாட்டு வளாகத்தில் மொத்தம் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கபடி ஆடுகளம், 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுக ளங்கள் கொண்ட மதுரை ஒலிம்பிக் அகாடமி, செயற்கை தரையமைப்பு கொண்டதாக மேம்படுத்தப்பட்ட 3 டென்னிஸ் மைதானங்கள், 2 கூடைப் பந்து மைதானங்களை திறந்து வைத்து பார்வையிட்டு, விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில் நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாந கராட்சி ஆணையாளர் திருமதி சித்ரா விஜயன், உள்பட உள்ளாட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளை யாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.